


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)




# சாதுர்மாஸ்ய சிறப்பு இதழ் 1

**2023 ஆம் வருடம் ஜூலை மாதம் 3 ஆம் தேதி முதல் செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி வரைசாதுர்மாஸ்ய விரதம்.**

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ  ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்


# ப்ரச்னோத்ர ரத்ன மாலிகா



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆதிசங்கரர் அருளியது

**1.**

कः खलु नालङ्क्रियते दृष्टा दृष्टार्थ साधन पटीयान् ।
अमुया कण्ठस्थितया प्रश्नोत्तररत्नमालिकया ।।
க꞉ க²லு நாலங்க்ரியதே த்³ரு’ஷ்டா த்³ரு’ஷ்டார்த² ஸாத⁴ன படீயான் |
அமுயா கண்ட²ஸ்தி²தயா ப்ரஶ்னோத்தரரத்னமாலிகயா ||

உலகியல், ஆன்மவியல் இரண்டினையும் பெறத் தகுதி மிக்கவர், ஆர்வமுள்ளவர், இப் ப்ரச்னோத்ர ரத்ன மாலிகையை உணர்ந்து தவறாது பயன்பெறுவர்.

**2.**

भगवन् किमुपयादेयं **?** गुरुवचनं**,** हेयमपि च किम्**?** अकार्यम् ।
को गुरु**?** अधिगततत्वः शिष्य हितायोद्यतः सततम् ।।
ப⁴க³வன் கிமுபயாதே³யம்’ ? கு³ருவசனம்’, ஹேயமபி ச கிம்? அகார்யம் |
கோ கு³ரு? அதி⁴க³தத்வ꞉ ஶிஷ்ய ஹிதாயோத்³யத꞉ ஸததம் ||

கேள்வி : அறியத் தக்கது எது**?**
பதில் : குருவின் வாக்கு.

கேள்வி: ஒதுக்கத் தக்கது எது**?**
பதில் : அகார்யம் (செய்யத் தகாததைச் செய்தல்)

கேள்வி : குரு யார்**?**
பதில் : சத்தியத்தை உணர்ந்தவர்; தன்னை அண்டிய சீடனின் நலத்திற்காக இடைவிடாது பாடுபடுபவர்.அவரே குரு.

तं किं कर्तव्यम् विदुषां **?** संसारसन्ततिच्छेदः ।
किं**3.**
त्वरि मोक्षतरोर्बीजम् **?** सम्यक् ज्ञानं क्रियासिद्धम्।।
த்வரிதம்’ கிம்’ கர்தவ்யம் விது³ஷாம்’ ? ஸம்’ஸாரஸந்ததிச்சே²த³꞉ |
கிம்’ மோக்ஷதரோர்பீ³ஜம் ? ஸம்யக் ஜ்ஞானம்’ க்ரியாஸித்³த⁴ம் ||

கேள்வி : அறிவுள்ளவன் விரைந்து செய்ய வேண்டியது யாது**?**
பதில் : பிறப்பு, இறப்பென்ற சம்சாரத் தொடரைக் கத்தரித்தல்.

கேள்வி : முக்தி என்னும் மரத்துக்கு வித்து எது**?**
பதில் : உள்ளதை உள்ளபடி அறிந்து செயலில் ஈடுபடுதல்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

**4.**

कः पथ्यतरो **?** धर्मः**,** कः शुचिरिह**?** यस्य मानसं शुद्धम् ।
कः पण्डितो **?** विवेकी**,** किं विषम् **?** अवधीरणा गुरुषु ।।
கः பத்$^{2}$யதரோ ? த$^{4}$ர்மः, கः ஶுசிரிஹ? யஸ்ய மானஸம்’ ஶுத்$^{3}$த$^{4}$ம் |
கः பண்டி$^{3}$தோ ? விவேகீ, கிம்’ விஷம் ? அவதீ$^{4}$ரணா கு$^{3}$ருஷு ||

கேள்வி : நலம் விளைவிப்பது எது **?**
பதில் : தர்மம்.

கேள்வி: எவர் தூயவர்**?**
பதில் : உள்ளத்தால் தூய்மையானவரே உண்மையில் தூயவர்.

கேள்வி : எவர் பண்டிதர்**?**
பதில் : விவேகி.

கேள்வி : எது விஷம்**?**
பதில் : சான்றோரின் சொல்லைப் புறக்கணித்தல்.

**5.**

किं संसारे सारम्**?** बहुशोऽपि विचिन्त्यमानं इदमेव ।
किं मनुजेषु इष्टतमं **?** स्वपरहिताय उद्यतं जन्म।।
கிம்’ ஸம்’ஸாரே ஸாரம்? ப$^{3}$ஹுஶோ(அ)பி விசிந்த்யமானம்’ இத$^{3}$மேவ |
கிம்’ மனுஜேஷு இஷ்டதமம்’ ? ஸ்வபரஹிதாய உத்$^{3}$யதம்’ ஜன்ம||

கேள்வி : சம்ஸாரத்தில் சாரம் எது **?**
பதில் : அடிக்கடி இதனை நினைப்பதே! (அதாவது ஸம்ஸாரத்தில் ஸாரமேது? என அடிக்கடி நினைப்பதால், அதிலுள்ள தோஷம் அறியும்போது நம் பற்று விட்டுப் போகும்.)

கேள்வி : மனிதன் வேண்ட வேண்டியது யாது**?**
பதில் : தான், பிறர் என இருவரின் நலத்திற்காகவும் முயலும் பிறவி.

**6.**

मदिरेव मोहजनकः कः **?** स्नेहः**,** के च दस्यवो**?** विषयाः ।
का भववल्ली**?** तृष्णा**,** को वैरी**?** यस्त्वनुद्योगः ।।
மதி$^{3}$ரேவ மோஹஜனகः கः ? ஸ்னேஹः, கே ச த$^{3}$ஸ்யவோ? விஷயாः |
கா ப$^{4}$வவல்லீ? த்ரு’ஷ்ணா, கோ வைரீ? யஸ்த்வனுத்$^{3}$யோக$^{3}$ः ||

கேள்வி : கள் போல் மயக்குவது எது?
பதில் : பற்றுதல்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கேள்வி: திருடர்கள் யார்?
பதில் : புலன்களை ஈர்க்கும் விஷயங்கள்.

கேள்வி : சம்சாரக் கொடி எது?
பதில் : ஆசை.

கேள்வி : பகைவன் யார்?
பதில் : சோம்பல்.

**7.**

कस्मात् भयमिह**?** मरणात्, अन्धादिह को विशिष्यते **?** रागी ।
कः  शूरो **?** यो ललना लोचनबाणैः न च व्यथितः ।।
கஸ்மாத் ப⁴யமிஹ? மரணாத், அந்தா⁴தி³ஹ கோ விஶிஷ்யதே ? ராகீ³ |
க: ஶூரோ ? யோ லலனா லோசனபா³ணை: ந ச வ்யதி⁴த: ||

கேள்வி : அனைவரும் அஞ்சுவது எதனிடம்?
பதில் : மரணத்திடம்.

கேள்வி : குருடனிலும் குருடன் யார்?
பதில் : ஆசையுள்ளவன்.

கேள்வி: சூரன் யார்?
பதில் : தீயவழியில் மனம் போகாது தடுப்பவன். பெண்டிர் தம் பார்வையெனும் பாணங்களால் அடிபடாதவன்.

**8.**

पातुं कर्णाञ्जलिभिः किं अमृतमिह युज्यते**?** सदुपदेशः ।
किं गुरुताया मूलं **?** यदेतदप्रार्थनं नाम ।।
பாதும்' கர்ணாஞ்ஜலிபி⁴: கிம்' அம்ரு'தமிஹ யுஜ்யதே? ஸது³பதே³ஶ: |
கிம்' கு³ருதாயா மூலம்' ? யதே³தத³ப்ரார்த²னம்' நாம ||

கேள்வி : செவியால் உண்ணும் அமுதம் எது?
பதில் : சாதுக்களின் உபதேசம்.

கேள்வி : மதிப்புக்கு மூலம் எது?
பதில் : எதனையும், எவரிடத்தும் கேளாதிருத்தல்.

**9.**

किं गहनं**?** स्त्रीचरितं**,** कश्चतुरो **?** यो न खण्डितस्तेन ।
कः दुःखं **?** असन्तोषः, किं लाघवं**?** अधमतो याच्ञा ।।

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

கிம்' க³ஹனம்'? ஸ்த்ரீ சரிதம்', கஶ்சதுரோ ? யோ ந க²ண்டி³தஸ்தேன |
க: து³:க²ம்' ? அஸந்தோஷ:, கிம்' லாக⁴வம்'? அத⁴மதோ யாச்ஞா ||

கேள்வி : அளவிட முடியாதது எது?
பதில் : பெண்களின் நடத்தை.

கேள்வி : திறமைசாலி யார்?
பதில் : பெண்களின் நடத்தையால் வஞ்சிக்கப் படாதவர்.

கேள்வி : துயரம் எது?
பதில் : திருப்தி இன்மை.

கேள்வி : இழிவு எது?
பதில் : கீழ் மகனிடம் யாசிப்பது.

**10.**

किं जीवितं? अनवद्यं । किं जाड्यं ? पाठतोप्यनभ्यासः ।
को जागर्ति? विवेकी । का निद्रा ? मूढता जन्तोः ।।
கிம்' ஜீவிதம்'? அனவத்³யம்' . கிம்' ஜாட்³யம்' ? பாட²தோப்யனப்⁴யாஸ: |
கோ ஜாக³ர்தி? விவேகீ . கா நித்³ரா ? மூட⁴தா ஜந்தோ: ||

கேள்வி : உயர்ந்த ஜீவனம் எது?
பதில் : குற்றமின்மை.

கேள்வி : அறிவின்மை என்பது யாது?
பதில் : தனது முன்னேற்றத்தில் முயற்சியும் பயிற்சியும் இன்றி இருத்தல்.

கேள்வி : விழிப்புடையோர் எவர்?
பதில் : விவேகமுள்ளவர்.

கேள்வி : உறக்கம் எது?
பதில் : மூடத்தனம்.

**11.**

नलिनीदलगत जलवत्तरलं किं? यौवनं धनं चायुः ।
कथय पुनः के शशिनः किरणसमाः? सज्जना एव ।।
நலினீத³லக³த ஜலவத்தரலம்' கிம்'? யௌவனம்' த⁴னம்' சாயு: |
கத²ய புன: கே ஶஶின: கிரணஸமா:? ஸஜ்ஜனா ஏவ ||

கேள்வி : தாமரை இலைத் தண்ணீர் போல் நிலையில்லாதது எவை?

பதில் : இளமை, செல்வம், ஆயுள்.

கேள்வி : சந்திர கிரணம் போன்றவர் யார்?
பதில் : சான்றோரே!

**12.**

को नरकः? परवशता, किं सौख्यं ? सर्वसङ्गविरतिर्या ।
किं सत्यं ? भूतहितं, प्रियं च किं प्राणिनां? असवः । ।

கோ நரக:? பரவஶதா, கிம்’ ஸௌக்$^{2}$யம்’ ? ஸர்வஸங்க$^{3}$விரதிர்யா |
கிம்’ ஸத்யம்’ ? பூ$^{4}$தஹிதம்’, ப்ரியம்’ ச கிம்’ ப்ராணினாம்’? அஸவ: ||

கேள்வி : நரகம் எது?
பதில் : பிறர் வசப்படல்.

கேள்வி : சௌக்கியம் எது?
பதில் : ஸர்வ சங்க பரித்யாகம்.

கேள்வி: சாதிக்க வேண்டியது யாது?
பதில் : உயிர்களுக்கு நலம் செய்தல்.

கேள்வி: உயிரினங்களுக்கு விருப்பமுள்ளது எது?
பதில் : பிராணன்.

**13.**

को अनर्थफलो? मानः, का सुखदा? साधुजनमैत्री ।
सर्वव्यसनविनाशे को दक्षः ? सर्वथा त्यागी ।।

கோ அனர்த$^{2}$ப$^{2}$லோ? மான:, கா ஸுக$^{2}$தா$^{3}$? ஸாது$^{4}$ஜனமைத்ரீ |
ஸர்வவ்யஸனவிநாஶே கோ த$^{3}$க்ஷ: ? ஸர்வதா$^{2}$ த்யாகீ$^{3}$ ||

கேள்வி : எது அனர்த்தத்தைத் தரும்?
பதில் : அகம்பாவம்.

கேள்வி : எது சுகத்தைத் தரும்?
பதில் : நல்லோர் இணக்கம்.

கேள்வி : எல்லா துக்கங்களையும் களைபவர் எவர்?
பதில் : எதனையும் வேண்டாம் என விடுபவர்.

**14.**

किं मरणं? मूर्खत्वं, किं चानर्घं? यदवसरे दत्तम्।

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

आमरणात् किं शल्यं ? प्रच्छन्नं यत्कृतं पापम् ।।
கிம்’ மரணம்’? மூர்க2த்வம்’, கிம்’ சானர்க4? யத3வஸரே த3த்தம் |
ஆமரணாத் கிம்’ ஶல்யம்’ ? ப்ரச்ச2ன்னம்’ யத்க்ரு’தம்’ பாபம் ||

கேள்வி: மரணம் அல்லது மரணத்திலும் பெரியது எது?
பதில் : அசட்டுத்தனம்.

கேள்வி : விலைமதிக்க முடியாதது எது?
பதில் : சமயமறிந்து கொடுத்தது.

கேள்வி : சாகும்வரை குத்துவது எது?
பதில் : இரகசியத்தில் செய்த பாவம்.

**15.**
कुत्र विधेयो यत्नो? विद्याभ्यासे सदौषधे दाने।
अवधीरणा क्व कार्या? खलपरयोषित्परधनेषु ।।
குத்ர விதே4யோ யத்னோ? வித்3யாப்4யாஸே ஸதௌ3ஷதே4 தா3னே |
அவதீ4ரணா க்வ கார்யா? க2லபரயோஷித்பரத4னேஷு ||

கேள்வி : முயற்சி எதன் பொருட்டு இருக்க வேண்டும்?
பதில் : கல்விப் பயிற்சி, நல்ல மருந்து, தானம் செய்தல் இவற்றிற்காக.

கேள்வி : அலட்சியம் செய்ய வேண்டியது எது?
பதில் : கெட்டவர்கள், பிறர் மனை, பிறர் பொருள்.

**16.**
काहर्निशमनुचिंत्या? संसारासारता न तु प्रमदा।
का प्रेयसी विधेया? करुणा दीनेषु सज्जने मैत्री ।।
காஹர்நிஶமனுசிந்த்யா? ஸம்’ஸாராஸாரதா ந து ப்ரமதா3|
கா ப்ரேயஸீ விதே4யா? கருணா தீ3னேஷு ஸஜ்ஜனே மைத்ரீ ||

கேள்வி : இரவும் பகலும் நினைக்க வேண்டியது எது?
பதில் : சம்ஸாரத்தில் சாரமில்லை என்பதையே.

கேள்வி : விரும்பிச் செய்யவேண்டியது எது?
பதில் : தீனர்களிடத்தில் கருணையும், சாதுக்களின் நட்பும்.

**17.**
कण्ठगतैरप्यसुभिः कस्य ह्यात्मा न शक्यते जेतुम् ?
मूर्खस्य शङ्कितस्य च विषादिनो वा कृतघ्नस्य ।।

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கண்ட2க3தைரப்யஸூபி4: கஸ்ய ஹ்யாத்மா ந ஶக்யதே ஜேதும் |
மூர்க2ஸ்ய ஶங்கிதஸ்ய ச விஷாதி3னோ வா க்ரு'தக்4னஸ்ய ||

கேள்வி : உயிரே போவதாயினும், எவரின் ஆத்மாவை நல்வழிப்படுத்த முடியாது?
பதில் : போக்கிரிகள், எப்போதும் சந்தேகப்படுவோன், அழுமூஞ்சி, நன்றி இல்லாதவன்.

**18.**

कः साधुः **?** सद्वृत्तः**,** कमधमाचक्षते**?** त्वसद्वृत्तम्।
केन जितं जगदेतत् **?** सत्यतितिक्षावता पुंसा । ।
கஃ ஸாது4: ? ஸத்3வ்ரு'த்த:, கமத4மாசக்ஷதே? த்வஸத்3வ்ரு'த்தம் |
கேன ஜிதம்' ஜக3தே3தத் ? ஸத்யதிதிக்ஷாவதா பும்'ஸா ||

கேள்வி : சாது யார்**?**
பதில் : நல்ல நடத்தை உடையவர்.

கேள்வி : எவன் கீழ்மகன்**?**
பதில் : தீய நடத்தை உள்ளவள்.

கேள்வி : உலகை வெல்ல வல்லவர் யார்**?**
பதில் : சத்தியமும் பொறுமையும் உள்ளவர்.

**19.**

कस्मै नमांसि देवाः कुर्वन्ति **?** दया-प्रधानाय ।
कस्मात् उद्वेगः स्यात्**?** संसारारण्यतः सुधियः ।।
கஸ்மை நமாம்'ஸி தே3வா: குர்வந்தி ? த3யா-ப்ரதா4னாய |
கஸ்மாத் உத்3வேக3: ஸ்யாத்? ஸம்'ஸாராரண்யத: ஸுதி4ய: ||

கேள்வி: எவரைத் தேவர்களும் தொழுவர்**?**
பதில் : தயை உடையவரை.

கேள்வி: எதைக் கண்டு அஞ்ச வேண்டும்**?**
பதில் : சம்ஸாரமாகிய காட்டைக் கண்டு நல்லறிவுள்ளவர் அஞ்ச வேண்டும்.

**20.**

कस्य वशे प्राणिगणः **?** सत्यप्रियभाषिणो विनीतस्य ।
क्व स्थातव्यं **?** नयाय्ये पथि दृष्टादृष्टलाभाढ्ये ।।
கஸ்ய வஶே ப்ராணிக3ண: ? ஸத்யப்ரியபா4ஷிணோ வினீதஸ்ய |
க்வ ஸ்தா2தவ்யம்' ? நயாய்யே பதி2 த்3ரு'ஷ்டாத்3ரு'ஷ்டலாபா4ட்4யே ||

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

கேள்வி: ஜீவராசிகள் எவருக்கு வசப்படும்?
பதில் : சத்தியமும், பிரியமும் மிக்க சொற்களைப் பேசும் பணிவுள்ளவருக்கு.

கேள்வி : நிலைத்து நிற்க வேண்டியது எங்கு?
பதில் : காணப்படும் மற்றும் காணப்படாத இகபரம் என்னும் இரண்டிலும் பயனுள்ள வழியில்.

**21.**

को अन्धो**?** यो अकार्यरतः**,** को बधिरो**?** यो हितानि न श्रुणोति।
को मूको**?** यः काले प्रियाणि वक्तुं न जानाति।।
கோ அந்தோ⁴? யோ அகார்யரத:, கோ ப³தி⁴ரோ? யோ ஹிதானி ந ஶ்ருணோதி |
கோ மூகோ? ய: காலே ப்ரியாணி வக்தும்' ந ஜானாதி ||

கேள்வி : குருடன் யார்**?**
பதில் : படித்திருந்தும் தீச்செயல் செய்பவன்.

கேள்வி : செவிடன் யார்**?**
பதில் : தனக்கு நல்லது சொல்பவரின் சொல் கேளாது. விலக்குபவன்.

கேள்வி : ஊமை யார்**?**
பதில் : இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்லத் தெரியாதவன்.

**22.**

किं दानं **?** अनाकाङ्क्ष**,** किं मित्रं **?** यो निवारयति पापात् ।
को अलङ्कारः **?** शीलं**,** किं वाचां मण्डनं**?** सत्यं ।।
கிம்' தா³னம்' ? அனாகாங்க்ஷ, கிம்' மித்ரம்' ? யோ நிவாரயதி பாபாத் |
கோ அலங்கார: ? ஶீலம்', கிம்' வாசாம்' மண்ட³னம்'? ஸத்யம்' ||

கேள்வி: தானம் என்பது எது**?**
பதில் : கேட்காது கொடுப்பது.

கேள்வி : சிநேகிதர் யார்**?**
பதில் : பாபம் செய்யாது தடுப்பவர்.

கேள்வி : அழகு எது**?**
பதில் : சீலம்.

கேள்வி : வாக்கிற்கு அழகு எது**?**

பதில் : ஸத்தியம்.

**23.**

विद्युत्-विलसित-चपलं किं**?** दुर्जनसङ्गतिः युवतयश्च ।
कुलशीलनिष्प्रकम्पाः के**?** कलिकालेऽपि सज्जना एव ।।
வித்$^{3}$யுத்-விலஸித-சபலம்' கிம்'? து$^{3}$ர்ஜனஸங்க$^{3}$தி: யுவதயஶ்ச .
குலஶீலநிஷ்ப்ரகம்பா: கே? கலிகாலே(அ)பி ஸஜ்ஜனா ஏவ ..

கேள்வி : மின்னல் ஒளி போல் சஞ்சலமானவை யாவை?
பதில் : தீயார் நட்பும், பெண்டிரும்.

கேள்வி : கலிகாலத்திலும் குல ஒழுக்கத்திலிருந்து சலிக்காதவர் யார்?
பதில் : சான்றோரே.

**24.**

चिन्तामणिरिव दुर्लभमिह किं**?** कथयामि तच्चतुर्भद्रम् ।
किं तद्वदन्ति भूयो विधूततमसो विशेषेण **?**
दानं प्रियवाक्य सहितं ज्ञानमगर्वं क्षमान्वितं शौर्यम् ।
वित्तं त्यागसमेतं दुर्लभमेतत् चतुर्भद्रम् ।।
சிந்தாமணிரிவ து$^{3}$ர்லப$^{4}$மிஹ கிம்'? கத$^{2}$யாமி தச்சதுர்ப$^{4}$த்$^{3}$ரம் |
கிம்' தத்$^{3}$வத$^{3}$ந்தி பூ$^{4}$யோ விதூ$^{4}$ததமஸோ விஶேஷேண ?
தா$^{3}$னம்' ப்ரியவாக்ய ஸஹிதம்' ஜ்ஞானமக$^{3}$ர்வம்' க்ஷமான்விதம்' ஶௌர்யம் |
வித்தம்' த்யாக$^{3}$ஸமேதம்' து$^{3}$ர்லப$^{4}$மேதத் சதுர்ப$^{4}$த்$^{3}$ரம் ||

கேள்வி: சிந்தாமணி போல் கிடைத்தற்கரியது எது ?
பதில் : சதுர் பத்ரம்.

கேள்வி : அந்த நான்கு பத்ரம் எவை?
பதில் : பிரியமான சொற்களோடு செய்யப்படும் தானம், அகந்தையற்ற ஞானம், மன்னிக்கும் மனப்பான்மையுடன் கூடிய சௌர்யம் (வீரம்) தியாகத்துடன் கூடிய செல்வம்.

**25.**

किं शोच्यं**?** कार्पण्यं, सति विभवे किं प्रशस्तं **?** औदार्यम्।
क**:** पूज्यो विद्वद्भि**:?** स्वभावत**:** सर्वदा विनीतो य**:** ॥
கிம்' ஶோச்யம்'? கார்பண்யம்', ஸதி விப$^{4}$வே கிம்' ப்ரஶஸ்தம்' ? ஔதா$^{3}$ர்யம் |
க: பூஜ்யோ வித்$^{3}$வத்$^{3}$பி$^{4}$:? ஸ்வபா$^{4}$வத: ஸர்வதா$^{3}$ வினீதோ ய: ||

கேள்வி : பரிதாபத்திற்குரியது எது?

பதில் : தனக்கும் பிறருக்கும், இகத்துக்கும், பரத்துக்கும் உதவாது நிறைய செல்வத்தை வைத்திருத்தல்.

கேள்வி : வசதிகள் மிகுந்துள்ள போது புகழத்தக்கது எது?
பதில் : உதாரகுணம்.

கேள்வி : அறிவுடையோர் யாரை பூஜிப்பர்?
பதில் : இயல்பாகவே பணிவுள்ளவரை.

**26.**

कः कुलकमलदिनेशः **?** सति गुणविभवेऽपि यो नम्रः ।
कस्य वशे जगदेतत् **?** प्रियहितवचनस्य धर्मनिरतस्य ।।
கः குலகமலதி³னேஶः ? ஸதி கு³ணவிப⁴வே(அ)பி யோ நம்ரः |
கஸ்ய வஶே ஜக³தே³தத் ? ப்ரியஹிதவசனஸ்ய த⁴ர்மநிரதஸ்ய ||

கேள்வி : ஒருவர் பிறந்த குலமென்னும் தாமரை எந்த சூரியனால் ஆனந்தத்துடன் பிரகாசிக்கிறது?
பதில் : நிறை குணத்தோடும், பூரணப் பணிவோடும் இருப்பவரைக் கண்டால் குலமென்னும் தாமரை பிரகாசிக்கிறது.

கேள்வி : இந்த பிரபஞ்சம் எவருக்கு வசப்படும்?
பதில் : இனிமையாகப் பேசக் கற்றுக் கொண்டு, தர்ம நெறி தவறாது நடப்பவருக்கு.

**27.**

विद्वन्मनोहरा का**?** सत्कविता बोधवनिता च ।
कं न स्पृशति विपत्तिः **?** प्रवृद्धवचनानुवर्तिनं दान्तम् ।।
வித்³வன்மனோஹரா கா? ஸத்கவிதா போ³த⁴வனிதா ச |
கம்’ ந ஸ்ப்ரு’ஶதி விபத்திः ? ப்ரவ்ரு’த்³த⁴வசனானுவர்தினம்’ தா³ந்தம் ||

கேள்வி: வித்வான்களின் மனத்தைக் கவர்வன யாவை?
பதில் ; நல்ல கவிதையும்; புத்தி என்னும் வனிதையும்.

கேள்வி : விபத்து எவனைத் தீண்டாது?
பதில் : பெரியோர் வார்த்தையை அனுசரித்து நடப்பவனையும், அடக்கமுள்ளவனையும்.

**28.**

कस्मै स्पृहयति कमला**?** त्वनलसचित्ताय नीतिवृत्ताय ।
त्यजति च क सहसा **?** द्विजगुरुसुरनिन्दाकरं च सालस्यम् ।।
கஸ்மை ஸ்ப்ரு’ஹயதி கமலா? த்வனலஸசித்தாய நீதிவ்ரு’த்தாய |

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

த்யஜதி ச க ஸஹஸா ? த்³விஜகு³ருஸுரநிந்தா³கரம்’ ச ஸாலஸ்யம் ||

கேள்வி : லக்ஷ்மி யாரை விரும்புவாள்?
பதில் : சுறுசுறுப்பான சித்தமுடைய நீதிநெறி பிறழாதவரை.

கேள்வி: திருமகள் எவரை விரைவில் விட்டு நீங்குவாள்?
பதில் : பிராமணரையும், குருவையும், தேவர்களையும் நிந்திக்கும் சோம்பேறித்தன முடையவரை.

**29.**

कुत्र विधेयो वासः **?** सज्जननिकटेऽथवा काश्याम् ।
कः परिहार्यो देशः **?** पिशुनयुतो लुब्धभूपश्च ।।
குத்ர விதே⁴யோ வாஸ: ? ஸஜ்ஜனநிகடே(அ)த²வா காஶ்யாம் |
க: பரிஹார்யோ தே³ஶ: ? பிஶுனயுதோ லுப்³த⁴பூ⁴பஶ்ச ||

கேள்வி : வசிக்கத்தக்க இடம் எது?
பதில் : நல்லவர்களின் சமீபத்தில், அல்லது காசி க்ஷேத்திரத்தில்.

கேள்வி : விட்டு விலக வேண்டிய தேசம் எது?
பதில் : கீழ்மக்களுள்ளதும் உலோபியான மன்னன் ஆளும் நாடும் ஆகும்.

**30.**

केनाशोच्यः पुरुषः **?** प्रणतकलत्रेण धीरविभवेत।
इह भुवने कः शोच्यः**?** सत्यपि विभवे न यो दाता ।।
கேநாஶோச்ய: புருஷ: ? ப்ரணதகலத்ரேண தீ⁴ரவிப⁴வேத |
இஹ பு⁴வனே க: ஶோச்ய:? ஸத்யபி விப⁴வே ந யோ தா³தா ||

கேள்வி : எதனால் மனிதன் துக்கமில்லாதவனாவான்?
பதில் : நல்ல அனுசரிப்புள்ள மனைவியாலும், நிலையான ஐசுவரியத்தாலும்.

கேள்வி : வருந்தத்தக்கவன் யார்?
பதில் : பொருளிருந்தும் ஈயாதவன்.

**31.**

किं लघुताया मूलं**?** प्राकृतपुरुषेषु याञ्चा।
रामादपि कः शूरः **?** स्मरशरनिहतो न यश्चलति । ।
கிம்’ லகு⁴தாயா மூலம்’? ப்ராக்ரு’தபுருஷேஷு யாஞ்சா|
ராமாத³பி க: ஶூர: ? ஸ்மரஶரனிஹதோ ந யஶ்ச்சலதி ||

கேள்வி : இகழ்ச்சிக்குக் காரணம் யாது?

பதில் : தாழ்ந்தவர்களிடம் யாசிப்பது.

கேள்வி : ஶ்ரீராமனை விட சூரன் யார்?
பதில் : காமனின் அம்புகளால் அடிக்கப்பட்டும், தன்னிலை இழக்காதவன்.

**32.**

किमहर्निशमनुचिन्त्यं**?** भगवच्चरणं न संसारः ।
चक्षुष्मन्तोऽप्यन्धाः के स्युः **?** ये नास्तिका मनुजाः ।।
கிமஹர்நிஶமனுசிந்த்யம்'? ப[4]க[3]வச்சரணம்' ந ஸம்'ஸார: |
சக்ஷுஷ்மந்தோ(அ)ப்யந்தா[4]: கே ஸ்யு: ? யே நாஸ்திகா மனுஜா: ||

கேள்வி: இரவும் பகலும் சிந்திக்கத் தக்கது எது?
பதில் : பகவானின் திருவடிகள்; ஜனன மரண வடிவான சம்சாரம் வேண்டாமை.

கேள்வி : கண்ணிருந்தும் குருடர் யார்?
பதில் : நாஸ்திகர்கள்.

**33.**

कः पङ्गरिह प्रथितो**?** व्रजति च यो वार्धके तीर्थम् ।
किं तीर्थमपि च मुख्यं **?** चित्तमलं यन्निवर्तयति ।।
க: பங்க[3]ரிஹ ப்ரதி[2]தோ? வ்ரஜதி ச யோ வார்த[4]கே தீர்த[2]ம் |
கிம்' தீர்த[2]மபி ச முக்[2]யம்' ? சித்தமலம்' யந்நிவர்தயதி ||

கேள்வி : முடவன் யார்?
பதில் : முதிர்ந்த வயதில் தீர்த்த யாத்திரை போகின்றவன்.

கேள்வி: முக்கியமான தீர்த்தம் எது?
பதில் : மனஅழுக்கை தீர்ப்பது.

சிறப்பு இதழ் 2லில் தொடரும் ....

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஆசார்யாளின் அனுகிரஹ பாஷணம்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

மனிதன் எப்பொழுதும் ஏதாவது ஒரு செயலைச் செய்துகொண்டேதான் இருப்பான். ஒரு செயலும் செய்யாமல் அவனால் சும்மா இருக்க முடியாது. ப்ரக்ருதி (இயற்கை) குணங்களுக்கு வசப்பட்டு அவன் மூலமாக ஏதாவது செயல்கள் நடந்துகொண்டே இருக்கும்.

न  हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्य कर्मकृत् ।
कार्यते ह्यवश: कर्म सर्व: प्रकृतिजैर्गुणै: ॥
ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட²த்ய கர்மக்ரு’த் |
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ரு’திஜைர்கு³ணை: ||



அந்தச் செயல்களை எப்படிச் செய்தால் நன்மையுண்டாகும் என்று சிந்தித்து அவன் செயல்படவேண்டும். அதற்கு ஸத்ஸங்கம் (நல்லோர்களின் ஸஹவாஸம்) மிகவும் தேவை. நல்லோர்கள் ஸஹவாஸத்திலிருந்தால் புத்தியும் மனதும் தெளிவாக இருக்கும். மனதில் நல்ல சிந்தனைகளே உண்டாகும். நல்ல செயலையே செய்யத் தோன்றும். கெட்ட ஸஹவாஸம் கெட்ட செயல்களுக்குக் காரணமாகி மனிதனுக்கு மேன்மேலும் துன்பத்தையே அளிக்கும்.

सङ्गोय: संसृतेर्हेतुरसत्सु विहितोऽधिया ।
स एव साधुषु कृतो नि:सङ्गत्वाय कल्पते ॥
ஸங்கோ³ய: ஸம்’ஸ்ரு’தேர்ஹேதுரஸத்ஸு விஹிதோ(அ)தி⁴யா |
ஸ ஏவ ஸாது⁴ஷு க்ரு’தோ நி:ஸங்க³த்வாய கல்பதே ||

சில சமயங்களில் நல்லவனுக்குக்கூட, 'இப்படிச் செய்தால் நல்லதா ? அப்படிச் செய்தால் நல்லதா? என்ற குழப்பம் உண்டாகும். அப்பொழுது தன்னுடைய குருவிடம் அறிவுரை பெற்று அதன்படி நடக்கவேண்டும். இக்காலத்தில் பலரும் இதைக் குறித்து சிந்தனை செய்யாமல், நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ளாமல்; கெட்ட ஸஹவாஸத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். யாருடைய செயலானது

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

தர்மத்திற்காக, வைராக்யத்திற்காக (நிஷ்காம சர்மம் மூலமாக), பகவானின் திருவடிகளை ஸேவிப்பதற்காக, அமைவதில்லையோ, அவன் உயிருடன் இருந்தாலும் அவனை இறந்தவனாகத்தான் எண்ணவேண்டும் என்று, சாஸ்திரம் கூறுகிறது.

नेह यत्कर्मधर्माय न विरागाय कल्पते ।
न तीर्थपदसेवायै जीवन्नपि मृतो हि स: ॥
நேஹ யத்கர்மத$^{4}$ர்மாய ந விராகா$^{3}$ய கல்பதே |
ந தீர்த$^{2}$பத$^{3}$ஸேவாயை ஜீவன்னபி ம்ருதோ ஹி ஸ: ||

ஆகையால், அனைவரும் நல்லோர்களின் ஸஹவாஸத்திலேயே இருந்துவர வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசிர்வதிக்கிறோம்.

நன்றி : அம்மன் தரிசனம்



ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்